**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | கிறிஸ்தவம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 4 | 21) 4 | 31) 2 | 41) 4 |
| 2) 2 | 12) 1 | 22) 2 | 32) 4 | 42) 5 |
| 3) 5 | 13) 4 | 23) 3 | 33) 5 | 43) 2 |
| 4) 2 | 14) 1 | 24) 1 | 34) 2 | 44) 2 |
| 5) 4 | 15) 5 | 25) 2 | 35) 3 | 45) 4 |
| 6) 3 | 16) 4 | 26) 3 | 36) 4 | 46) 3 |
| 7) 2 | 17) 5 | 27) 4 | 37) 1 | 47) 1 |
| 8) 1 | 18) 3 | 28) 3 | 38) 2 | 48) 2 |
| 9) 3 | 19) 3 | 29) 2 | 39) 5 | 49) 1 |
| 10) 5 | 20) 2 | 30) 1 | 40) 3 | 50) 2 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

## வினாத்தாள் - II
## பகுதி I

1) 1. பஞ்சாகமம், நீதிச்சட்டம், மோசேயின் சட்டம், மேசேயின் நீதி, மேசேயின் நீதி நூல்

2. 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன்

3. 
- இறைவன் ஆதாம் ஏவாளுக்கு ஆடையமைத்துக் கொடுக்கின்றார்.
- இறைவன் நோவாவின் பேழையின் நுழைவாயிலை அடைகின்றார்.
- குயவனாக செயற்பட்டார்.
- விவசாயியாயினார்.
- தோட்டக்காரன்
- அறுவைச் சிசிக்சையாளர்.

4. நாம் எவ்வாறான உயர் நிலையில் (அன்னியமான) இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன்.
இவ்வாறான 1 கொரிந்தியர் 13ல் கூறப்படும் அன்பு பற்றிய வார்த்தைகளை உதாரணமாகக் கூறி தனது செயற்பாட்டுடன் விளக்கி இருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

2) 1. பரிசேயரும், மறைநூல் அறிஞர்களும்
சதுசேயர்
செலஸ்தியர்
எஸ்சேனியர்

2. 1. வரலாற்றிற்கு முற்பட்ட காலம்.
2. பிதாப் பிதாக்கள் காலம்

3. 
- தனக்குப் பின் தனது பேரப்பிள்ளையான தர்மபாலாவுக்கு இராச்சியத்தை ஒப்படைக்க வேண்டும்.
- இதற்கு அடையளமாக தான் அனுப்புகின்ற தர்மபாலாவின் தங்கச்சிலைக்கு முடிசூட்ட வேண்டும்.
- தன்னையும் இளவரசன் தர்மபாலாவையும் பாதுகாக்க வேண்டும்.
- கத்தோலிக்க மதத்தைப் பரப்ப மறைத்தூதுவர்களை அனுப்ப வேண்டும்.

4. தமது சமூகத்தில் காணப்படும் பெண்ணடிமை தனத்தின் நிலைகளை குறிப்பிட்டு அதற்கமைவாக மாணவனது கருத்துக்கள் இருப்பின் புள்ளியிடவும்.

3) 1. நிசேயா திருச்சங்கம்.
கொன்ஸ்தாந்தி நோபிள் சங்கம்
எபேசு திருச்சங்கம்.
கல்சிடோன் திருச்சங்கம்.

2. நிசேயா – கிறிஸ்து பிதாவோடு ஒரே பொருளானவர் செனித்தவர் உண்டாக்கப்பட்டவர் அல்ல.
கொன்ஸ்தாந்தி நோபிள் - கிறிஸ்து பிதாவோடு ஒரே பொருளானவர் உறுதிப் படுத்தப்பட்டது.
நிசாயே விசுவாசப் பிரமானத்திற்கான அனுமதி.
எபேசு – கிறிஸ்து ஒரே ஆள் அவருக்குள் இறை சுபாவமும், மனித சுபாவமும் ஒன்றிணைந்துள்ளன. மரியாள் தேவதாய் ஆவார்.
கல்செதோன் - கிறிஸ்து உண்மையான இறைவன் உண்மையான மனிதன்.

3. கார்மேல் சபை
கப்புச்சின் சபை
வின்சென்சியன் சபை
யேசு சபை

4. 
- சரியான மதம் சார் விளக்கங்களைப் பாமர மக்களும் அறியச் செய்தல்.
- வேதாகம அறிவை மக்கள் மத்தியில் பெருகச் செய்தல்.
- பங்குத் தந்தைகள் பங்கு மக்களை நன்கு அக்கறையுடன் தெரிந்து கொண்டு வழிப் படுத்தல் பங்குத் தந்தை – பங்கு மக்கள் உறவு சமூகமாக இருத்தல்.
- திருச்சபையால் இயன்றவரை மக்களின் நலனுக்காக பணி செய்ய முனைதல்.
- கருத்தமர்வுகள், துண்டுப் பிரசுரங்கள், அன்பினால் மக்களைத்தேடிச் சென்று அவர்கள் மத்தியில் வழிபாடுகளை நிகழ்த்துதல்.

## பகுதி II

agaram.lk

4) 1. யேசுவில் நம்பிக்கை கொண்ட பிற இனத்தவர் விருத்த சேதனம் செய்து கொள்ள கட்டளையிட வேண்டுமெனப் பரிசேயரின் கட்சியினரும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட சிலரும் தர்க்கித்தனர். இறுதியில் இதற்கான முடிவாக மீட்புப் பெறுவது யேசுவின் அருளால் மட்டுமே எனும் நிலையில் ஜெருசலேம் சங்க தீர்மானம் அமைந்தது.
- விருத்தசேதனம் தேவையற்றது.
- சிலைகளுக்குப் படைக்கப்பட்டுத் தீட்டுப்பட்டவை.
- பரத்தமை, கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவை, இரத்தத்தை அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டுமென முடிவு எடுக்கப்பட்டது.

2. திருச்சபைக்கு தற்காலத்தில் ஏற்படும் சவால்களான.
- நவீன தொழில்நுட்ப சாதனப் பாவனைகளினால் ஏற்படும் குடும்ப பிரச்சினைகள்.
- கணவன் மனைவிகளின் விவாகரத்துக்கள் தகாத உறவுகள்.
- நேரமின்மையால் ஆலயத்தில் செல்லாதிருத்தல்.
- தற்கால தீவிரவாதிகளின் செயற்பாடு இவ்வாறான மாணவரின் தகுந்த கருத்துக்களுக்கு அமைவாக புள்ளி வழங்கல்

5) 1. ஒரே கடவுள் கொள்கை
ஒழுக்கம்.
மெசியா பற்றி சிந்தனை (தரம் 12 பக் 70)
இவற்றை விளக்கி இருப்பின் 10 புள்ளிகள் வழங்குதல்.

2. தூய வாழ்வு வாழ்வதற்கு நேர்மையான வழிமுறைகள் எழுதி இருப்பின் மாணவரின் கருத்திற்கமைவாக புள்ளி வழங்கல்.

6) 1. சுய வெளிப்பாட்டுக் கூற்று
- வாழ்வு தரும் உணவு.
- உலகின் ஒளி நானே.
- ஆடுகளுக்கு வாயில் நானே.
- நல்ல ஆயன் நானே.
- உயிர்த்தெழச் செய்வதும் வாழ்வு தருவதும் நானே.
- வழியும், உண்மையும் வாழ்வும் நானே.
- உண்மையான திராட்சைக் கொடி நானே.

2. உடல் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த இரக்கச் செயல்கள் பற்றி எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்குதல்.

7) 1.
- ◆ வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ கூட்டங்கள் நடாத்தத் தடை.
- ◆ கத்தோலிக்க வழிபாடுகள் நடாத்துவது அவற்றில் பங்கு பற்றுவது தடை.
- ◆ குரு இல்லாமல் சமய போதனைகளுக்குச் செவிமடுத்தல் பாட்டுப்பாடுதல் தடை.
- ◆ வீடுகளில் கிறிஸ்தவப் படங்கள், சிலைகள் வைத்திருப்பது தடை.
- ◆ குருக்களால் வழிபாடுகள் நடாத்துவது தடை.
- ◆ குருக்கள் அருட்சாதனங்கள் வழங்குதல் தடை.
- ◆ ஒல்லாந்தரின் நிபந்தனைகளை மீறுவோருக்குத் தண்டம் வழங்குதல், சிறையில் அடைத்தல் போன்ற கடும் தண்டனைகள் வழங்கப் பட்டது. குருக்கள் மறைவாக இருந்து பிடிபட்டால் நாடுகடத்தப்பட்டனர்.

2. (தரம் 13 பக்கம் 75) ஜோசவ்வாஸின் இலங்கை வரவு, துணிவு, பணி வாழ்வு, ஏழ்மை வாழ்வு (பிச்சைக்காரன்) தியாக வாழ்வு அவரின் புதுமைகள், அவரின் திறமைகள் இவ்வாறான ஜோசவ்வாஸின் வாழ்வின் சம்பங்களைக் குறிப்பிட்டு அதனை தனது செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி எழுதி இருப்பின் புள்ளி வழங்கல்.

8) பின்வருவோரில் நால்வர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1. தாவீது அரசன்
- கோலியத்தை தோற்கடித்தமையால் பிரபல்யம் அடைந்தவர்.
- சவுலின் மகள் மீக்காவை திருமணம் செய்தவர்.
- பொறாமையின் நிமித்தமாக சவுல் அரசன் இவரைக் கொலை செய்ய முயற்சித்தமையால் அவர் பாலைவனத்திற்கு தப்பி ஓடினார்.
- சவுலின் இறப்புக்கு முன் அரசனாக அபிஷேகம் செய்யப்பட்டு சவுலின் இறப்பின் பின்பு எபிரோனின் அரசனானார்.
- தாவீது அரசனின் ஆரம்பத்தில் இரட்டை ஆட்சி நிலவியது.
- எபூசியரின் நகரமாகிய ஜெருசலேமைத் தலைநகராக்கினார்.
- உடன்படிக்கைப் பேழையை ஜெருசலேமுக்கு கொணர்ந்து ஜெருசலேமை அரசியல், சமய முக்கியத்துவம் உடையதாக மாற்றினார். ஜெருசலேம் "தாவீதின் நகர்" என அழைக்கப் பட்டது.
- தாவீது இறந்த பின்பு அங்கு அடக்கும் செய்யப்பட்டார்.

2. துன்புறும் ஊழியன்.

இறைவனின் ஊழியர் என யேசுவைக் குறித்தே எசாயா இறைவாக்குரைத்தார். இதில் யேசுவின் இறப்பின் இறுதி நிகழ்வுகள் பற்றி அவர் விபரித்துள்ளார். நான்கு பாடல்கள் மூலம் எசாயா இதனை விபரிக்கின்றார். நாலாவது பாடலில் (எசாயா 52 : 13 – 23 : 12) பணியாளன் படும்பாடுகளின் கொடூரத்தை அவரது முகம் பார்ப்பதற்கு அருவருப்பான நிலையையும் அவலட்சணமான தன்மையும் கண்டு மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளாத தன்மையை விபரிக்கின்றார்.

agaram.lk

3. யாக்கொமே கொண்சால்வேஸ்

- இவர் இலங்கையின் கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுகின்றார். ஒறத்தோரியன் சபைக்குரு.
- சிங்கள மொழியில் 22 நூல்களையும் தமிழ்மொழியில் 15 நூல்களையும் போர்த்துக்கேய மொழியில் 4 நூல்களையும் ஒல்லாந்து மொழியில் 1 நூலையும் எழுதியுள்ளார்.
- இவர் தமிழில் எழுதிய நூல்களுள் “வியாகுல பிரசங்கம்” மிகவும் பிரபல்யமானது.
- இசையாற்றல் உள்ள இவர் கிறிஸ்தவ பக்தி பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.
- இவர் கத்தோலிக்க சிங்கள இசைக்கும் புத்துயிர் ஊட்டியுள்ளார்.

4. திருச்சபை தந்தையர். (தரம் 13 பக்கம் 25, 26)

5. மீட்புத் திட்டத்தில் பங்கு கொண்ட பெண்கள்.

மீட்புத் திட்டத்தில் பல்வேறு வழிகளில் பங்கெடுத்த பெண்கள் பலரைப் பற்றி திருவிவிலியத்தில் நாம் காணலாம். பாவிகளான மனித சமூகத்தை மீட்க யேசுவின் தாயாக இறைவன் தேர்ந்தெடுத்தது மரியாவையே. இதனால் மரியாள் பெண்களுக்குள் விசேட இடத்தைப் பெறுகின்றாள் யேசு சிலுவையடியில் தமது தாயாரை தான் அன்பு செய்த சீடரிடம் ஒப்படைத்ததன் மூலம் அவர் திருச்சபையின் தாயாகின்றார்.

- கிறிஸ்துவிற்கு முன்னோடியான திருமுழுக்கு யோவானின் தாய் எலிசபேத் மரியாளை வாழ்த்துதல்.
- யேசுவின் மறைப்பணியின் போது அவரைப் பின் தொடர்ந்து அவருக்கு உதவிய லாசரின் சகோதரிகள் மார்த்தாள், மரியாள்.
- யேசுவை இதுவரை கைவிடாது பின் சென்ற பெண்களான யொவன்னா, மரியாள், மரிய மதலேனாள். யேசுவின் உயிர்ப்பின் முதல் சாட்சியான மகதலேனாள் மரியாள்.

agaram.lk